# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 1010/2016/ந

ஆணை எண்: 172/2017

நாள்: 27/06/2017

திரு. R. இராமநாதன்,
53 . G /117, வ.உ.சி. தெரு,
சிதம்பரம் ,
கடலூர் மாவட்டம் 608 001. - முறையீட்டு மனுதாரர்

திரு. R. செல்வராஜ்,
நகராட்சி ஆணையர் (பொ),
சிதம்பரம் நகராட்சி. எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. R. இராமநாதன் என்பவரது 26.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு 28.09.2016 அன்று வரப்பெற்று எண்.1010/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் கீழ்க்கண்டவாறான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 4 பிளாக் 2 நகரளவு எண்.142 கதவு எண்.53G/115 வ.உ.சி. தெருவில் குடியிருப்பு கட்டிடம் கட்ட திருமதி. கற்பகம் என்பவரால் விண்ணப்பிக்கப் பட்டு (அனுமதி எண்.64/95) அனுமதிக்கப்பட்டதற்கு மாறாக குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு பதிலாக திருமண மண்டபமாக கட்டியுள்ளார். இது நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 205 (1) மற்றும் 205 (2)க்கு எதிரானது. இதன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பல முறை புகார் செய்தும் சம்பந்தப்பட்ட ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் மேற்படி விதி மீறி கட்டிடம் கட்டிய கட்டிட உரிமையாளிடம் அக்கரமலாபம் அடைந்து கொண்டு எந்தவித நடவடிக்கையும் இதுகாறும் எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள். இதனால் சிதம்பரம் நகராட்சிக்கு இழப்பீடு ஏற்படுகிறது...."

மேற்படி புகார்கள் தொடர்பாக கீழ்க்கண்ட ஆவணங்கள் ஆதாரங்களாக மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(i) நகராட்சி கட்டிட விதிகளுக்கு புறம்பாக விதி மீறி கட்டப்பட்டுள்ள மேற்படி திருமண மண்டப கட்டிடம் மீது நடவடிக்கை எடுத்திடக்கோரி மனுதாரரால் நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்ட 07.05.2012 நாளிட்ட புகார் மனு.

(ii) மனுதாரரது 09.01.2012 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மேல் முறையீட்டு மனு மீதான சிதம்பரம் நகராட்சியின் பதில் ந.க.எண்.4707/2011/எப்.1, நாள்:16.02.12. இக்கடிதத்தில் மேற்படி 'மாணிக்க மஹால்' என்கிற திருமண மண்டப கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதாக சிதம்பரம் நகராட்சி அலுவலகத்தில் தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் சார்பில் திரு. B. இரமேஷ், வழக்குரைஞர் என்பவரால் சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள 22.01.2014 நாளிட்ட சட்ட அறிவிப்பு

(iv) திரு. ஆர். செல்வராஜ், சிதம்பரம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களால் மேற்படி வழக்குரைஞருக்கு அளிக்கப்பட்ட பதில் (ந.க.எண்.316/2014/F1 நாள்:13.02.2014). இக்கடிதத்தில், சிதம்பரம் நகரம் வார்டு 4, பிளாக் 2, நகரளவு எண்.142 கதவு எண்.53G1, வ.உ.சி. தெருவில் கட்டிடம் கட்ட திருமதி. S. கற்பகம் என்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டு, நகராட்சியால் கட்டிட அனுமதி (எண்.64/95 நாள்:09.05.1995) அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும், நகராட்சியால் குடியிருப்பு கட்டிடமாக அனுமதி அளிக்கப்பட்டதை திருமண மண்டபமாக மாற்றியுள்ளதால் அன்னார் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 205 (1), (2)ன் கீழ் அறிவிப்பு கொடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v) திரு. G. சிவகுமார், முன்னாள் நகரமைப்பு ஆய்வாளர், சிதம்பரம் நகராட்சி அவர்கள் வழங்கிய, கட்டிட மனுவின் மேல் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவதற்கான அறிக்கை நகல் – இதில் 03.05.1995ல் மனுதாரரது விண்ணப்பம் பெறப்பட்டதாகவும் கட்டிட பயன்பாடு "குடியிருப்பு" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1010/2016/நாள்:17.10.2016ன் படி முறையீட்டு மனுதாரர் 18.11.2016 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு அழைக்கப்பட்டார். விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் சிதம்பரம் நகராட்சி வார்டு 4 பிளாக் 2 நகரளவு எண்.142 கதவு எண்.53ஜி/115, வ.உ.சி. தெருவில் குடியிருப்பு கட்டிடம் கட்ட திரு. எஸ். கற்பகம் என்பவருக்கு நகராட்சியால் (எண்.64/95) அனுமதிக்கப்பட்டதெனவும் ஆனால், அனுமதிக்கு மாறாக திருமண மண்டபம் கட்டியுள்ளது குறித்து 7.5.12ல் சிதம்பரம் நகராட்சி ஆணையாளருக்கும் 16.8.2014ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் வழக்குரைஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் 16.06.2012ல் பெறப்பட்ட தகவலில் மாணிக்க மஹால் திருமண

மண்டபம் கட்டுவதற்கு அனுமதி வழங்கவில்லை என நகராட்சியால் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். 22.15.2015ல் இதுபோன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் ஜோதி கிராமத்தில் குடியிருப்பு என அனுமதி பெற்று கல்யாண மண்டபம் கட்டியது குறித்து; சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு. சண்முகம் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு விதிகளை மீறி கல்யாண மண்டபமாக மாற்றி கட்டப்பட்டுள்ளதால் இதை 4 வாரங்களுக்குள் இடிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்ற அமர்வு உத்திரவிட்டுள்ள செய்தி வெளியான பத்திரிக்கை துணுக்கினை சமர்ப்பித்துள்ளார். நகராட்சியால் தனது புகார் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். மாறாக விதி மீறிய திருமண மஹால் கட்டிட உரிமையாளர் திருமதி. கற்பகம் என்பவரது கணவர் திரு. பொன் மாணிக்கம், பொதுப் பணித் துறையில் உதவி செயற் பொறியாளராக கடலூரில் பணிபுரிபவர் ஓராண்டுக்கு முன்பு தன்னை இது குறித்து மிரட்டியதாகவும் மனுதாரர் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.1010/2016/ந நாள்: 28.11.2016ன்படி 14.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. இதனிடையே 05.12.2016 அன்று வரப்பெற்ற சிதம்பரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.4306-2016-எப்1, நாள்:25.11.2016ல் மேற்படி கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி விண்ணப்பம் 03.05.1995ல் பெறப்பட்டு, நகராட்சியால் கட்டிட அனுமதி (எண்.64/1995) 09.05.1995ல் வழங்கப்பட்டு 1996ல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதெனவும், மேற்படி கட்டிட அனுமதிக்கு மாறாக் கட்டப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டு 28.12.2015ல் குற்றப்பத்திரிக்கை தயார் செய்யப்பட்டு சிதம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

14.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. எஸ். ஜெகதீசன், நகராட்சி ஆணையர் (பொ) சிதம்பரம் நகராட்சி அவர்கள் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்திற்கு குடியிருப்பு கட்டிடத்திற்கான அனுமதியே நகராட்சியால் வழங்கப்பட்டதெனவும் குடியிருப்பு இருந்து கொண்டு அதை அபிவிருத்தி செய்து திருமண மண்டபமாக மாற்றியுள்ளார்கள். எனவே ஏற்கெனவே குடியிருப்பு வீடாக இருக்கும் போது நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட சொத்துவரியே உள்ளதென தெரிவித்தார். விதி மீறிய கட்டிடம் தொடர்பாக அறிவிப்புகள் அனுப்பப்பட்டதாகவும் பின்னர் 28.11.2015ல் குற்ற அறிக்கை தயார் செய்யப்பட்டு திரு. அருண்செல்வன், நகர திட்ட ஆய்வாளரை வழக்கு தொடரும் அலுவலராக நியமனம் செய்து ஓர் அறிவிப்பும் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. சிதம்பரம் நகராட்சியிலுள்ள குற்றவியல் நடுவர் மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதெனவும், இன்னமும் வழக்கு ஏற்கப்படவில்லை எனவும் விசாரணை ஏதும் நடக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அதே நாளில் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த சிதம்பரம் நகராட்சியில் நகராட்சி பொறியாளராகவும், நகராட்சி ஆணையர் (பொ) ஆக பணிபுரிந்தவருமான திரு. ஆர். செல்வராஜ் என்பவர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவர் தான் மே 2012 முதல் பிப்ரவரி 2016 வரை சிதம்பரம் நகராட்சி ஆணையர் கூடுதல் பொறுப்பிலிருந்ததாகவும், விதி மீறிய கட்டிடம் தொடர்பான குற்றச்சாட்டு தாக்கல் தொடர்பான கடிதத்திலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அப்போது அறிவிப்பு வழங்கப்பட்டதெனவும், நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்ற விவரம் தெரியாதெனவும் நகரமைப்பு ஆய்வாளர் பொதுவாக கையெழுத்து வாங்குவாரெனவும் தான் கையெழுத்து போடுவதோடு சரி அதற்கு பிறகு என்ன நடந்தது என்று தனக்குத் தெரியாதெனவும் தெரிவித்தார்.

விதிகளுக்கு முரணாக கட்டிடம் கட்டியவரை எந்த விசாரணையும் செய்யவில்லை, நேரில் ஆய்வு செய்தது யாரென்றும் தான் விசாரிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மேற்படி புகாரிலுள்ள கட்டிடம் குறித்தான கட்டிட அனுமதி தொடர்பான நகராட்சியின் அசல் கோப்பு பெறப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. நகராட்சியின் சம்பந்தப்பட்ட கோப்பினை ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

(i) புகாரில் குறிப்பிட்டுள்ள நபர் (கட்டிட உரிமையாளர்) திருமதி. S. கற்பகம் என்பவர் தனது 17.5.1995 நாளிட்ட விண்ணப்பத்தில் புதியதாக வீடு கட்டிக் கொள்ளவே தான் விண்ணப்பித்துள்ளதாகவும் (9.5.1995) பின்னர் நகல்கள் வழங்கிடக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

(ii) சிதம்பரம் நகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை 09.05.1995 அன்றே வழங்கப்பட்டுள்ளது.

(iii) கட்டிட அனுமதி கால வரையறையும் 09.05.1995 முதல் 08.05.1998 வரை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv) உரிமையாணைக் கட்டணம் (ரூ.1760/-) மற்றும் மேம்பாட்டுக் கட்டணம் (ரூ.250/-) ஆகியவை 09.05.1995 அன்றே சலான் எண்.477 மூலம் பெறப்பட்டுள்ளது.

(v) விண்ணப்பம் பெறப்பட்ட உடன் அவசர கதியில் அனுமதி அளித்துள்ளது புலனாகிறது.

(vi) கட்டிட வரைபட அனுமதியும் 09.05.1995 அன்றே குடியிருப்பு வீட்டிற்கென அளிக்கப்பட்டுள்ளது.

(vii) நகர்மன்ற அனுமதி/தீர்மான எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

(viii) அப்போது நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்த திரு. கோ. சிவகுமார் என்பவர் 09.05.1995 அன்றே அளித்துள்ள திட்ட அனுமதிக்கான அறிக்கையில் "குடியிருப்பு ஆக" என்றே சான்றளிக்கப்பட்டுள்ளது.

(ix) கட்டிடம் முடிவுற்ற சான்றோ, சொத்துவரி நிர்ணய ஆணையோ, வரி வசூல் அல்லது மனு நிர்ணய விவரம் ஏதுமில்லை.

(x) 1996ல் கட்டிடம் கட்டி முடிவுற்றதாக நகராட்சி ஆணையரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 2014தான் அறிவிப்பு (விதி மீறிய கட்டிடம்) அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் 1996 முதல் 2014 வரையிலும் அதனைத் தொடர்ந்து நாளது வரையிலும் மேற்படி கட்டிடத்திற்கான வரி விதிப்பில் ஏற்பட்டுள்ள நிதி இழப்பினை கண்டறிவது அவசியமென இம்முறைமன்ற நடுவம் முடிவெடுத்து அது தொடர்பான ஆவண நகல்களுடன் அறிக்கை தாக்கல் செய்யுமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்.1010/16/ந நாள்:16.12.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி சிதம்பரம் நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.4584/16/அ2 நாள்:27.12.2016உடன் சில ஆவணங்களின் நகல்கள் உரிய சான்றொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்படி ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்ததில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

(i) நகராட்சியின் 12.12.2008 நாளிட்ட அறிவிப்பின்படி புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கு ரூ.7880/- சொத்து வரியிலிருந்து ரூ.11,820/- ஆக அதிகப்படுத்தப்பட்டது.

(ii) சொத்துவரி இரசீதுகளின்படி 11.04.2016ல் 2015-16 ஒரு அரையாண்டிற்கு ரூ.11,820/-ம், 14.11.2016ல் 2015-16 இரண்டாவது அரையாண்டு மற்றும் 2016-17 இரு அரையாண்டுகளுக்கென ரூ.35,460/-ம் (ரூ.11,820x3) வசூலிக்கப்பட்டுள்ளது.

(iii) கணினியிலிருந்து எடுத்து அனுப்பப்பட்டுள்ள புகாரிலுள்ள கட்டிடத்தின் சொத்துவரி நிர்ணய பதிவு விவரங்களின்படி கட்டிட அனுமதி 01.04.2002-ல் வழங்கப்பட்டுள்ளதாகவும் மனை அளவு 2500 ச.அ. எனவும் கட்டிட பயன்பாடு "வணிகம்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv) 2002-2003 முதல் 2014-2015 வரை உயர்த்தப்பட்ட சொத்துவரி வசூலிக்கப்பட்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) 09.05.1995ல் அன்றைய நகரமைப்பு ஆய்வாளர் திரு. கோ. சிவகுமார் என்பவரது திட்ட அனுமதி வழங்குவதற்கான கட்டிட அறிக்கையில் பயன்பாடு "குடியிருப்பு" என்றே உள்ளது.

(vi) நகராட்சி ஆணையரது அறிக்கை மற்றும் பிற விவரிக்கப்பட்ட விவரங்களின்படி 09.05.1995ல் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வரி நிர்ணய இரசீதுகளில் 01.04.2002ல் கட்டிட அனுமதி அளிக்கப்பட்டதாகவும் "குடியிருப்பு" என்பது "வணிகம்" எனவும் உரிய அனுமதி ஆணை வழங்கப்படாத நிலையில் எவ்வாறு மாற்றப்பட்டது என்பதற்கான விளக்கங்கள் ஏதுமில்லை.

மேலும், 09.05.1995ல் வழங்கப்பட்டுள்ள வரைபட அனுமதியில் மனையின் அளவு 2050 ச.அ. என்று உள்ளது. ஆனால் வரி இரசீதில் 2500 சதுர அடி என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, உரிய அனுமதி/அங்கீகாரமின்றி தனி நபர் பலனடையும் வகையில் விதிமுறைகளுக்கு முரணாக பதிவுகளும் மாற்றப்பட்டுள்ளன என்றே கருதப்படுகிறது.

இது குறித்து விசாரிக்கும் பொருட்டு திரு. அருள்செல்வன், நகரமைப்பு ஆய்வாளர் சிதம்பரம் நகராட்சி மற்றும் திரு. சிவக்குமார், முன்னாள் நகரமைப்பு ஆய்வாளர் (தற்போது பல்லவபுரம் நகராட்சி, நகரமைப்பு அலுவலர்) ஆகிய இருவரும் 10.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அ.ம.எண்.1010/16/ந நாள்:02.01.2017ன்படி ஆணையிடப்பட்டது.

முன்னாள் சிதம்பரம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. சிவக்குமார் தனது வாக்குமூலத்தில் புகாரில் குறிப்பிட்டுள்ள இடம் குறித்து தான் பணியில் இருந்தபொழுது குடியிருப்பு கட்டிடத்திற்கு தான் அனுமதி வழங்கப்பட்டதெனவும், திருமண மண்டபமாக மாற்றி கட்டியது தனக்கு தெரியாதெனவும் 9.5.1995ல் ஆய்வு செய்தபொழுது கட்டிடம் கட்ட ஆரம்பிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். 26.5.1995ல், தான் பணி மாறுதலில் செங்கல்பட்டு நகராட்சிக்கு சென்று விட்டதாகவும், தனக்குப் பின்பு திரு. கந்தசாமி (இறப்பு) என்பவரும் திரு. ஜெயசங்கர் என்பவரும் பொறுப்பில் இருந்ததாகவும் திரு. ஜெயசங்கர், தற்போது காஞ்சிபுரம் நகராட்சியில் நகரமைப்பு திட்ட ஆய்வாளராக பணி புரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து சிதம்பரம் நகராட்சியின் தற்போதைய நகரமைப்பு ஆய்வாளர் திரு. G. அருள்செல்வன் என்பவர் விசாரிக்கப்பட்டார். அவர் 2012-ஆம் ஆண்டு முதல் அங்கு பணிபுரிவதாகவும் குடியிருப்பு கட்டிட அனுமதி பெற்று திருமண மண்டபமாக கட்டியது தொடர்பாக எந்தவித தகவலும் இல்லை எனவும் முறையீட்டு மனுதாரர் திரு. ராமநாதன் ஜனவரி 2014ல் அளித்த புகாரைத் தொடர்ந்து 3.2.14ல் கட்டிட உரிமையாளருக்கு முதல் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும் 22.6.2016ல் இரண்டாவது அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்தார். 28.12.15ல் குற்றப் பத்திரிக்கை சிதம்பரம் 2-வது குற்றவியல் நடுவர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாக தெரிவித்தார். குடியிருப்பு கட்டிடம் என்பதை வணிகக் கட்டிடம் என மாற்றப்பட்டமைக்கான பதிவேடுகள் கிடைக்கவில்லை எனவும் வரைபடத்தில்

2050 ச.அ. என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2500 சதுரடிக்கு கட்டிடம் கட்டப்பட்டிருந்ததால் 2500 சதுரடிக்கு வரி வசூல் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது காஞ்சிபுரம் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிபவரும், முன்னாள் சிதம்பரம் நகரமைப்பு ஆய்வாளருமாகிய திரு. ஜெயசங்கர் என்பவர் 14.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது. (அ.ம.எண்.1010/2016/ந நாள்:11.01.2017). அதன்படி 14.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான மேற்படி பணியாளர் தான் முதன் முதலாக நேரடியாக நகரமைப்பு ஆய்வாளராக 24.11.1997ல் சேர்ந்து ஜூலை 2004 வரை சிதம்பரம் நகராட்சியில் பணி புரிந்ததாகவும், 1997ஆம் ஆண்டு புகாரிலுள்ள திருமண் மண்டபத்தை தான் பார்த்ததாகவும் எந்த வகைபாட்டில் அனுமதி பெறப்பட்டது என தனக்குத் தெரியாது எனவும் தெரித்தார். பில் கலெக்டர்கள் எவரும் இது குறித்து தன்னிடம் விவாதிக்கவில்லை என்றும் அறிவுரைகளுக்கிணங்க நேரில் சென்று விவரங்களை சேகரித்து சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தனது 28.02.2017 நாளிட்ட கடிதத்தில், அறிவுரைகளின்படி தான் நேரில் சென்று விசாரித்ததாகவும் புகாரில் கூறப்பட்ட கட்டிடம் 1996ம் வருடமே திருமண மண்டபமாக கட்டி முடிக்கப்பட்டதெனவும் வரி விதிப்பு தொடர்பான பட்டியல் ;தும் நகராட்சியில் கிடைக்கப் பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு, சொத்து வரி நிர்ணயிக்கப்பட்ட விவரம், "குடியிருப்பு" என அனுமதி வழங்கப்பட்டு "வணிகம்" என மாற்றப்பட்ட நாள், ஆவண நகல், 1996-லிருந்து 2014-2015 வரை வரி விதிக்கப்பட்ட விவரம், வசூலிக்கப்பட்ட விவரம், சட்ட விதிகளுக்கு முரணாக கட்டப்பட்டிருப்பின் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் ஆகிய விவரங்களடங்கிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சிதம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை முறையீட்டு மனு எண்.1010/2016/ந நாள்:22.03.17ல் ஆணையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நகராட்சி ஆணையரிடமிருந்து வரப்பெற்ற 10.04.2017 நாளிட்ட பதிலறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"— (1) மனுதாரர் கட்டியுள்ள சொத்துக்கு 1996-ம் ஆண்டிற்கு முன்பே வரி வதிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. காலம் கடந்த இனங்கள் என்பதால் அவற்றிற்குரிய கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

(2) மனுவில் தெரிவிக்கப்பட்ட கட்டிடத்திற்கு, புதிய வரி விதிக்கும் போதே வணிகம் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(3) 1996-ம் ஆண்டிற்கு முன்பு உள்ள கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை என்பதாலும், தற்போது அனைத்து வரிகளும் ஆன்லைன் சாப்ட்வேரில் பதிவு செய்யப்பட்டு விட்டதால்1996-ம் ஆண்டிற்கு முன்பு உள்ள வரி விதிப்புக்கான வரி செலுத்தப்பட்ட விவரம்

கணினியில் எடுக்க இயலவில்லை. மேலும், நிலுவையின்றி வரி செலுத்தப்பட்டுள்ளது. 2015-16 மற்றும் 2016-17க்கு வரி செலுத்திய விவரம் மட்டுமே கணினியில் எடுக்க முடிந்தது.

(4) மனுவில் சுட்டியுள்ள சொத்து தொடர்பாக சிதம்பரம் நடுவர் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது."

மேற்குறிப்பிட்ட வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்ததில் புகாரில் குறிப்பிட்டுள்ள கட்டிடத்திற்கான அனுமதி வழங்கியதிலிருந்து வரி விதிப்பு வரை பல்வேறு குளறுபடிகளும், முறைகேடுகளும் நடைபெற்றுள்ளன. வரி விதிப்பு, வரி வசூல் விவர ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. நடைபெற்றுள்ள விதி மீறல்கள், முறைகேடுகளை மூடி மறைக்கும் விதத்திலேயே செயல்படுவதும், அறிக்கை அளிப்பதும் கண்டிக்கத்தக்கதும் தண்டனைக்குரியதுமாகும் என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

கட்டிட அனுமதி 1995ல் வழங்கப்பட்டு 1996ல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில் 1996-ஆம் ஆண்டிற்கு முன்னதாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறதெனவும் "குடியிருப்பு" என அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய வரி விதிக்கும் போது வணிகம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என ஆண்டு விவரங்களின்றி தெரிவிப்பதும் வரி விதிப்பு/வசூல் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளதும், வழக்கு எண் விவரம் எதுமின்றி வழக்கு நிலுவையிலுள்ளது என பதிலளித்துள்ளதும் மிகவும் அபத்தமானதும் முரண்பட்டதும் ஆகும்.

அரசாணை நிலை எண்.289, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ.4(1) துறை நாள்:16.10.2016ன்படி, நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் கட்டிட விதிகளுக்கும் புறம்பாக அமைந்துள்ள கட்டுமானங்கள் குறித்து நகர் ஊரமைப்புச் சட்டம், 1971ன் பிரிவு 56 மற்றும் 57-ன் கீழ் அமலாக்க நடவடிக்கை தொடர நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நேர்வில் தக்க துரித நடவடிக்கைகளை சட்ட விதிகளுக்கிணங்க சிதம்பரம் நகராட்சி ஆணையர் மேற்கொண்டிட வேண்டுமென வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

மேலும், புகாரிலுள்ள கட்டிடத்திற்கான அனுமதி வகைப்பாடு, வரி விதிப்பு, வரி வசூல் விவரங்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் நேரடி ஆய்வு/விசாரணை செய்து நாளதுவரை ஏற்பட்டுள்ள வரி இழப்பீட்டினை கணக்கிட்டு அறிக்கை சமர்ப்பித்திட 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6 (4)ன் கீழ் ஆணையிடப்படுகிறது.

**நகராட்சிக்கான வருவாய் தொடர்பான இவ்வினத்தில் புகாருக்குப் பின்னரும் மெத்தனமாகவும், ஒருதலைப்பட்சமாகவும் பொறுப்பற்ற வகையிலும் செயல்பட்டுள்ளதையும்** இம்முறைமன்ற நடுவத்தால் கண்டறிந்து சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அனைத்தும்

களையப்பட வேண்டுமென கருதி சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இம்முறைமன்ற நடுவம் கேட்டுக் கொள்கிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு. R. இராமநாதன்,
53 , G /117, வ.உ.சி. தெரு,
சிதம்பரம் ,
கடலூர் மாவட்டம் 608 001.

2) நகராட்சி ஆணையர்,
சிதம்பரம் நகராட்சி,
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
செங்கற்பட்டு மண்டலம்.

4) நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.